REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: புரட்டாசி உ 30சனி (16—10—54) ★ ★ வெளியூர்: ஐப்பசி 1உ ஞாயிறு (17—10—54) [இதழ் 107

கிறித்துவ பள்ளிகளுக்குச் செல்லக்கூடாது!

மதத்தைப் பாதுகாக்க சவூதி அரேபிய சர்க்கார் உத்திரவு

சவூதி அரேபியாவில் உள்ள கிறித்துவப் பள்ளிகளுக்கு, சவூதி அரேபிய நாட்டுக் குழந்தைகள் யாரும் செல்லக்கூடாது என்று சர்க்கார் உத்திரவிட்டிருக்கின்றனர்.

இஸ்லாம் மதத்தின் மீது உள்ள தொடர்பை வலுப்படுத்திப் பாதுகாப்பதற்கே, சவூதி அரேபிய சர்க்கார் இந்த உத்திரவை பிறப்பித்துள்ளனர் என்று, கராச்சியில் உள்ள சவூதி அரேபிய நாட்டுத் தூதுவர் கூறியுள்ளார்.

சவூதி அரேபிய மன்னரின் இந்த உத்திரவுகளை மீறுவோரின் குடி உரிமை பறிக்கப்படும். சர்க்கார் அதிகாரிகளாக இருந்தால் வேலையிலிருந்து நீக்கப்படுவராம்!

நேருவுக்கு முன்பு பசுவதை தடுப்பு பெண்டிர் ஆர்ப்பாட்டம்?

ஏற்பாட்டிற்கு மாருக வேறு பாதையில் பண்டிதர் பயணம்!

★

கல்கத்தா, அக். 15—

சீனுவிற்குப் புறப்பட்ட பண்டித நேரு கல்கத்தா கவர்னர் மாளிகையில் தங்கினர். விமான நிலையத்திலிருந்து அம்மாளிகைக்கு, மத்திய கல்கத்தாவில் உள்ள சித்தரன்ஜன் வட்டத்தின் வழியாக பண்டிதர் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதை அறிந்த பசு வதை தடுப்பு இயக்கத்தைச் சேர்ந்த பெருவாரியான பெண்கள் உட்பட பலர், பண்டிதர் வரவுக்கு அங்குக் காத்துக் கிடந்தனர். அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் சிக்காமல் அவரை தப்பவைப்பதற்காக, வேறு வழியில் கவர்னர் மாளிகைக்கு பண்டிதர் அழைத்துச் செல்லப்பட்டார்.

ஏமாற்றம் பெற்றும்கூட தடுப்பு இயக்கத்தவர், அவருக்கு முன் ஆர்ப்பாட்டம் செய்யும் முயற்சியைக் கைவிட்டுவிடவில்லை. அவர் தங்கி இருந்த கவர்னர் மாளிகைக்கு முன் சென்று ஆர்ப்பாட்டம் செய்ய முனைந்தனர். அவர்கள், மாளிகையின் அருகாமையில் உள்ள எஸ்பிளனேட் சாலையிலேயே போலீஸ் படையினரால் தடுக்கப்பட்டுவிட்டனர். அதனல், அங்குள்ள டிராம் பாதையில் உட்கார்ந்து கொண்டு கோஷங்களை ஒலித்துக்கொண்டிருந்தனர். அதனல் போக்குவரத்துக்குத் தடை ஏற்பட்டது. அக்குற்றத்திற்காக போலீசார் பசுவதைத் தடுப்பு இயக்கத்தைச் சேர்ந்த 16 நபர்களைக் கைது செய்தனர். அவர்களில் அதிகம் பேர் பெண்களாவர்!

திரு — தமிழர் போராட்டம்

கைது செய்யப்பட்டவர்களில் 36 பேர் ஜாமீனில் விடுதலை

திரு—த. நா. காங்கிரசைச் சேர்ந்த 109 பேரில் 36 பேரை ஜாமீனில் விடுவிக்க நாகர்கோவில் செஷன்ஸ் நீதிபதி திருமதி அன்னு சாண்டி தீர்ப்புக் கூறியுள்ளார்.

நாகர்கோவில் நகரசபைத் தலைவர் அனந்தராமனை ஜாமீனில் விடுவிக்கவில்லை.

இந்த 109 பேர்களும் திரு—தமிழர் இணைப்புப் போராட்டத்தில் பங்கு கொண்டு, சிறைப்படுத்தப்பட்டவர்களாகும்.

ஐம்பது ஆண்டுகளாக நாட்டை கொள்ளையிட்டனர்!

பிரிட்டிஷார் மலேரியா கொசுக்கள் போன்ற கொடியவர்கள்!

ஈரான் பாராளுமன்றத்தில் குற்றச்சாட்டுகள்!

"பிரிட்டிஷ்காரர்கள் அனைவரும் மலேரியா கொசுக்களாவார்கள்; நாம் 'டி. டி. டி.' மருந்தை உபயோகித்தால், அக்கொசுக்களிடமிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்."

"பிரிட்டிஷ்காரர்கள் ஈரானை ஐம்பது ஆண்டுகளாகக் கொள்ளையிட்டு, லஞ்சம் கொடுத்து வந்திருக்கிறார்கள்."

"இப்போது, 500 ஈரான் அதிகாரிகளை தேசத் துரோகக் குற்றம் சாட்டி துன்புறுமாறு பிரிட்டிஷார் செய்துவிட்டனர்; இந்த அதிகாரிகள் எல்லாரும் கம்யூனிஸ்டுகள் அல்ல; மனம் நொந்து போயிருக்கும் தேசியவாதிகளே! இதுபோன்று, அவர்கள் மனம் நொந்துபோகுமாறு துன்பமிழைத்தோர் யார்? கடந்த ஐம்பது ஆண்டு

(4-ம் பக்கம் பார்க்க)

மக்கள் சபையில்...

ஆந்திராவுக்கு 28 இடங்கள்

தொகுதி பிரிவினைக் குழு ஆந்திர மாநிலத்திற்கு இந்திய மக்கள் சபையில் 28 இடங்களும், ஆந்திர மாநில சட்டசபையில் 196 உறுப்பினர்களும் இருக்க வேண்டுமென முடிவு செய்து உத்தரவிட்டுள்ளதாம்.

சீட்டோ, பார்மோசா

சீனத் தலைவர்களுடன் நேரு விவாதிப்பார்

சீனுவிற்குச் செல்லும் பண்டித நேரு சீனத் தலைவர்களுடன், தென்கிழக்காசிய ஒப்பந்தம் பற்றியும், பார்மோசா பற்றியும் கலந்து பேசுவார் என்று தெரிகிறது.

வெளி நாடுகளில் உள்ள சீனர்களின் நிலைபற்றியும் நேரு சீனுவில் விவாதிப்பார் என்று தெரிகிறது.

'ராஜ்பவனி'ல் 300 பேர் காவலில் உள்ளனர்?

'ராஜப் பிரமுகர்' மீது நடவடிக்கை எடுக்க அரசியல் சட்டம் குறுக்கிடுகிறதா?

விளக்கம் கேட்ட மாவட்ட நீதிபதிக்கு உயர் நீதிமன்றத் தீர்ப்பு

"ஐதராபாத் 'ராஜ்பவனி'ல் 200 பெண்களும், 100 ஆண்களும் சட்டத்திற்குப் புறம்பாக அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி உண்மைதானு?" என்று விசாரித்தறியுமாறு பி. ஜி. கேஸ்கர் என்பவர் மாவட்ட நீதிபதிக்கு எழுதினர்.

நீதிபதியும், போலீஸ் கமிஷனரை, 'இந்தச் செய்தி உண்மைதானு?' எனக் கண்டறியுமாறு உத்திரவிட்டார்; ஆனல், போலீஸ் கமிஷனரோ, அரசியல் சட்ட 361-வது விதிப்படி ராஜப் பிரமுகர்மீது எவ்வித குற்ற நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சியும் செய்ய முடியாதெனக் கூறினர்.

அதன் பேரில் மாவட்ட நீதிபதியான ஆர். அனுமந்த ராவ் என்பவர், அரசியல் சட்டத்தின் 361-வது விதி, 2-வது பிரிவிற்கு சரியான விளக்கம் தருமாறு, உயர்நீதி மன்றத்திற்கு எழுதினராம்.

அதாவது, 'ராஜப் பிரமுகர் மீது குற்ற நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது,' என்ற விதி விலக்கு, அவரது வீட்டிற்குள்ளும் அனுமதிக்கப்பட வேண்டியதுதானு?' என்பதைக் குறித்து விளக்கம் தருமாறு கேட்டிருந்தார்.

ஆனல், உயர்நீதி மன்றத்தார், "மாவட்ட நீதிபதி விளக்கம் கேட்டுள்ள முறையே தவறு; அவர் கி. பு. கோ. 432-வது பிரிவைக் கவனிக்கவில்லை; அதன்படி, ஒரு மாகாண நீதிபதி மட்டும்தான், அரசியல் சட்டத்தில் ஏற்படுகிற சந்தேகங்களுக்கு விளக்கம் கோரி மனுச் செய்ய முடியும்," என்று தீர்ப்பளித்துவிட்டனராம்!

கிராமங்களுக்கு மின்சார வசதி!

"கிராமங்களின் பொருளாதார முன்னேற்றத்துக்காகவும், சிறிய தொழில்களின் மூலம் வேலை வசதியைப் பெருக்கிக்கொள்ளவும் மின்சார வசதியை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும்; அது, அவசர காரியத் திட்டமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று நதி பள்ளத்தாக்குத் திட்டக் குழு முடிவு செய்திருக்கிறது.

ஆப்பிரிக்காவில் பழி தீர்க்கும் படலம்!

வெள்ளைக் குடும்பத்தின்மீது 'மாவ் மாவ்' தாக்குதல்

'பயங்கரவாதி'களில் எட்டு பேர் சுட்டு விழ்த்தப்பட்டனராம்!

நைரோபி, அக். 15—

கிரே லீக்கே, என்பவரையும், அவரது மனைவியையும் 'மாவ் மாவ்' இயக்கத்தினர் வீட்டினுள் புகுந்து தாக்கினர். கிரேலீக்கேயை அவர்கள் தூக்கிச் சென்றுவிட்டனராம். இதுவரை அவர் திரும்பவும் கிடைக்கவில்லை. அவர் என்ன ஆனர் என்பதை அறிய போலீசார் தீவிரமாக முயன்று வருகின்றனர்.

அந்தக் கணவனும், மனைவியும் கடந்த உலக யுத்தத்தின்போது கெனியாவிலேயே முதன் முதலாக 'விக்டோரியா கிராஸ்' என்ற பதக்கம் பெற்ற ஒருவரின் பெற்றோர்களாம்.

அவர்கள் இருவரும், இரவு உணவு அருந்திக் கொண்டிருந்தனர். அவர்களுடன், விதவையாகிவிட்ட அவர்களது மகளும் இருந்தார்; ஒரு ஆப்பிரிக்க சமையல்காரர் உணவு பரிமாறிக் கொண்டிருந்தாராம்.

30 பேரடங்கிய 'மாவ் மாவ்' குழுவினர் வீட்டை உடைத்து, உள்ளே புகுந்து, சமையல்காரனைத் தாக்கிக் கொன்றுவிட்டு, தம்பதிகளையும் தாக்கியிருக்கின்றனர்.

எழுபது வயதான கிரேலீக்கேயை அவர்கள் வீட்டிலிருந்து கடத்திச் சென்றுவிட்டனர் என்றும் தெரிகிறது.

திருமதி லீக்கேயின் கழுத்தை நெறித்து அவரைத் திக்குமுக்காடச் செய்திருக்கின்றனர். அவரது மகளான டயானு ஹார்ட்லே, தனது தாயாரைக் காப்பாற்ற முயற்சித்தும் முடியவில்லை; தான் கூரைமீது ஏறித் தப்பித்துக் கொண்டாராம்.

பின்னர், போலீசார், அருகிலிருந்த காடுகளில் தேடி, துப்பாக்கிச் சண்டையிட்டு, ஆயுதந்தரித்த மாவ்மாவ் இயக்கத்தைச் சேர்ந்த எட்டுப்பேர்களைக் கொன்று, அவர்களிடமிருந்து ஆயுதங்களையும் பறிமுதல் செய்துள்ளனராம்.

ஒரு மாதத்திற்கு முன்பு சிறை ஒன்றைத் தாக்கி 214 கைதிகளை விடுவித்துச் சென்ற மவங்கி மடோடே என்ற மாவ்மாவ் இயக்கத்தின் தலைவர்களில் ஒருவரும், சுட்டு வீழ்த்தப்பட்ட எட்டு பேர்களில் ஒருவர் எனத் தெரிகிறது.

மீனுட்சிசுந்தரம் (பிள்ளை) மறைந்தார்

★

பந்தநல்லூர் நாட்டிய கலாநிதி வித்வான் மீனுட்சிசுந்தரம் (பிள்ளை) தமது 86-வது வயதில், தனது கிராமத்தில் உள்ள இல்லத்தில், 14—10—54 விடியற்காலை உயிர் துறந்தார்.

அவர், நாட்டியக் கலையின் ஒப்புயர்வற்ற தந்தையாவார். அவரிடத்தில் நாட்டியக் கலை பயின்ற நங்கையரும் நம்பிகளும் ஏராளம்.

அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் இசை பேராசிரியராக இருந்த காலஞ்சென்ற பொன்னையா (பிள்ளை)யும், தஞ்சாவூர் பரத நாட்டிய வித்வான் காலஞ்சென்ற பிச்சையா (பிள்ளை)யும் அவருடைய மருமகப்பிள்ளைகளாவர். நாட்டியக் கலை விசாரதா சொக்கலிங்கம் (பிள்ளை) மற்றொரு மருகனுவார்.

அவரது பிரிவு நாட்டியக் கலைக்கு ஈடு செய்ய முடியாத பெரு நஷ்டமாகும். அவருடைய மருகருக்கு நமது அனுதாபத்தை அறிவித்துக் கொள்கிறோம். (ஆ-ர்.)

நெடுஞ்செழியன் யாழ்ப்பாணத்தில் வரவேற்கப்பட்டார்

★

யாழ்ப்பாணம், அக். 15—

நேற்று நண்பகல் 1-15 மணியளவில் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் யாழ்ப்பாண விமான நிலையம் வந்து சேர்ந்தார். யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலிருந்தும் இயக்கத் தோழர்கள் வந்து மலர் மாலை அணிவித்து வரவேற்கப் பட்டதுடன் புகைப்படமும் பிடித்துக்கொண்டார். பின் இயக்க முக்கியஸ்தர்களுடனும், பத்திரிகை நிருபர்களுடனும் அளவளாவிவிட்டு 2-மணிக்கு கொழும்பு செல்ல விமானத்தில் புறப்பட்டார்.

[குறிப்பு:—யாழ்ப்பாண நகராண்மைக் கழக மண்டபத்தில் 19—10—54 மாலை 6-மணிக்கு 'தமிழர் [illegible]' என்னும் பொருள் பற்றி தோழர் இரா. நெடுஞ்செழியன் [illegible]]

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 16—10—1954 சனி

மகிழ்ச்சியில் ஒரு மாசு!

இராபர்ட் கிளைவ் கண்ட பிரிட்டிஷ் சாம்ராஜ்யம், இற்றைக்குச் சரியாக ஏழு ஆண்டுகளுக்கு முன் இந்தியத் துணைக் கண்டத்தை இரு கூறுகளாக்கி, இரு தனிப் பெரும் சுதந்திர அரசுகளை உருவாக்கிவிட்டு, பிறந்த இடத்துக்குத் திரும்பி விட்டது. தம்மை விரட்டும் அளவிற்குப் போதிய பலம் பெறாதவர்களாக எதிரிகள் இருந்தபோதிலும்கூட, கால மாற்றத்தாலும், தனது சரிந்து போன பலத்தை நன்கு புரிந்து கொண்டதினாலும், இங்கிலாந்து, தனது அரிய செயலால், இதற்கு முன் என்றும் கண்டிராத ஒரு வரலாற்றைத் தோன்றச் செய்துவிட்டது. அதன் நடைமுறையில், என்றென்றும் அருவருப்புக் காட்டிக்கொண்டு இருந்தவர்கள்கூட, அது செய்த 'சுதந்திர தான'த்தில் பூரிப்படைந்து, அதன் செயலை வானளாவப் புகழ்ந்து பாராட்டினர்; இன்றும் 'பாராட்டிக் கொண்டு இருக்கின்றனர். அதுவுமல்லாமல், அத்துடன் கூட்டுறவு கொண்டு வாழ்வதில் தனிப் பெரும் இன்பம் கண்டும் வருகின்றனர்.

ஏழு ஆண்டுகளுக்கு முன், இந்தியா விஷயத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நடந்துகொண்டதை ஒரு முன்மாதிரியாகக் கொண்டு, பிரெஞ்சு ஏகாதிபத்தியமும் நடந்துகொண்டிருக்க வேண்டியதுதான் முறையாகும் என்பதை எவரும் மறுக்கத் துணியார். அவ்வுயர்ந்த போக்கை அதனிடம் சிலபலர் எதிர்பார்க்கவும் செய்தனர். ஆனால், அந்த ஏகாதிபத்தியமோ எல்லோருக்கும் ஏமாற்றத்தை அளித்துவிட்டது, தனது ஏகாதிபத்திய வெறிச் செயலால்!

பெரும் புயல் வீசினாலும், இடியும் மழையும் ஒன்று கூடி அச்சுறுத்தினாலும், தமது பிடிவாதத்தைவிட முடியாது என வீம்பு பேசிக் கொண்டு பிரெஞ்சிந்தியப் பகுதிகளை விட்டு வெளியேற மறுத்து விட்டது.

முதல் முதலாக உலக மக்களுக்கெல்லாம், 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' ஆகிய சிறந்த மனிதப் பண்புகளை உபதேசித்ததோடு மட்டுமல்லாமல், கொடுங்கோலனையும் அவனைச் சுற்றிக் கிடந்த சோற்றாலடித்த பிண்டங்களையும் வீழ்த்தி, சொந்த நாட்டில் மேற்குறிப்பிட்ட மூன்று இலட்சியங்களையும் நிலை நாட்டிய பிரான்சும், பிரெஞ்சு இந்தியாவைவிட்டு வெளியேற மறுத்து சண்டித்தனம் செய்துவந்த பிரான்சும் வெவ்வேறுகத்தான் இருக்குமோ என்றும் கூட, பிரான்சின் புகழ் மணக்கும் முன்னாள் வரலாற்றையே சந்தேகிக்கத் தொடங்கினர் மக்கள். தனது பழம்பெரும் வரலாற்றை மாசு வந்தடையும் அளவில், பிரெஞ்சிந்தியாவில் பேயாட்டம் ஆடியது பிரெஞ்சு ஏகாதிபத்தியம்!

ஆனால், அவ்வாறு அடம் பிடித்துக் கொண்டிருந்த பிரெஞ்சு ஏகாதிபத்தியமும், இறுதியில் மக்கள் குரலுக்குச் செவி சாய்க்கும் நிலையைப் பெற்றுவிட்டது. பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்கு, முடிவாக எடுபிடிகளாக இருந்த சிலரும், எப்பொழுதும்போல் இனியும் வெண்சாமரம் வீச முடியாது என சமீப காலத்தில் அறிவித்துவிட்டனர்; அறிவித்ததோடு நின்றுவிடாமல், தாங்கள் முன்னாள் ஏகாதிபத்தியத்திற்கு உற்ற துணைவர்களாக இருந்து, உரிமை வேட்கைக்கு ஊறு செய்து வந்ததற்குக் கழுவாய் தேடும் முறையில், பிரெஞ்சிந்திய நிலப் பரப்பிலேயே ஒரு போட்டி சர்க்காரையும் உருவாக்கிவிட்டனர். அவர்களில் ஓரிருவர் முன்னாள் அதிகாரத்தில் இருந்தபோது நடந்துகொண்ட ஒழுக்கக்கேட்டை மறைத்துக்கொள்ளவும், சட்டம் கோரும் தண்டனையிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ளவுமே, அவர்கள் அவ்வாறு நடந்துகொள்ள முன்வந்தனர் என, அவர்கள் செய்த அப்பெருஞ்செயலுக்கு விளக்கமும் தரப்படுகிறது. அவ்விளக்கம் நூற்றுக்கு நூறு உண்மை என்றே வைத்துக் கொள்வதாக இருந்தாலும் கூட, பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்கு எதிராக அவர்கள் உருவாக்கிய 'போட்டி அரசு' ஒரு புனிதமான செயலாக இல்லாமல் போய்விடாது.

அவர்கள் கட்டிய அரசின் உடனடி விளைவாகத்தான், தனது மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு, கப்பலேறி விடுகிறேன் என்று அலறுகின்ற நிலை பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை நியாய புத்தி படைத்தவர் எவரும் ஒப்புக் கொள்வர் என்பதில் ஐயமில்லை.

இவ்வளவு காலம் கடந்த பின்னராவது, பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்கு நல்லறிவு பிறந்ததற்கு; அவர்கள் மேற்கொண்ட செயல்தான் காரணம் என்றே ஏற்படுவதால், இந்த நேரத்திலும் கூட, மக்களின் உரிமை நிலைநாட்டப்படுவதே முக்கியம் எனக் குறியாகக் கொண்டிருக்கும் ஒவ்வொருவரும், அவர்களின் முற்போக்கான செயலைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளனர்.

பிரெஞ்சிந்திய மக்களின் உரிமை வேட்கை நிறைவு பெறுவதற்கு, ஏகாதிபத்தியத்திற்கு எதிராக் 'போட்டி அரசு' கண்டவர்களின் செயலே சிறந்த காரணமாக இருந்தபோதிலும், ஏகாதிபத்திய வெறி கொண்டவர்களே பிரான்சின் பிரதமராக இருந்திருந்தால், பிரெஞ்சிந்திய மக்களின் விடுதலை விருப்பம் இதற்குள்ளாக வெற்றி பெற்றிருக்கும் எனச் சொல்வதற்கில்லை. அப்பொறுப்பில் ஏகாதிபத்திய மோகிகள் வீற்றிருந்த நேரத்தில் எல்லாம், பிரெஞ்சிந்திய மக்கள் பெற்றுவந்தது அடக்குமுறைகளைத்தான் என்பதை அனைவரும் அறிவர். ஆனால், பிரான்சின் பிரதமராகவும் வெளிநாட்டு அமைச்சராகவும் மெண்டே பிரான்ஸ் பதவியிலமர்ந்ததும், இந்தோ—சீனத்தில் அமைதியை நிலைநாட்டினது போலவே, பிரெஞ்சிந்தியாவுக்கும் அதன் பிறப்புரிமையை உறுதிப்படுத்த முன் வந்தார். அவர் செயல், நமது போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரியதாகும்.

தூப்பிளே என்ற பிரெஞ்சுக்காரனால் ஏறத்தாழ இரு நூறு ஆண்டுகளுக்கு முன் நிலைநாட்டப்பட்ட பிரெஞ்சு ஏகாதிபத்திய அரசு, பிரெஞ்சிந்தியாவை விட்டு, மெண்டே பிரான்ஸ் காலத்தில் வெளியேறுகிறது, என்ற செய்தி நமக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

பிரெஞ்சிந்தியாவை விட்டு ஏகாதிபத்தியம் விலகி, அப்பகுதி நமது திராவிடத்துடன் இணைய வேண்டும் என்ற விருப்பத்தை, தனது முதல் மாநில மாநாட்டில் தி. மு. க. தீர்மான உருவில் ஆணித்தரமாக வலியுறுத்தி இருக்கிறது. அத்தீர்மானத்தில் முதற் பகுதியான பிரெஞ்சு ஏகாதிபத்தியம் வெளியேறுவதுதான் இப்பொழுது நடைபெற இருக்கிறது. இது, நமக்கு மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியாகும்! ஆனால், அத்தீர்மானத்தின் பிற்பகுதி இன்னமும் நிறைவேறாமல் இருக்கின்றதை எண்ணும் பொழுது, ஏகாதிபத்தியம் வெளியேறுகிறது என்பதில் நமக்கு உண்டாகும் மகிழ்ச்சியில் மாசு ஏற்படுகிறது!

பிரெஞ்சிந்தியாவை விட்டு, வெளியேறிவிட வேண்டுமென்ற நினைப்பு, மெண்டே பிரான்சுக்கு இயல்பாக ஏற்பட்ட ஒன்று அல்ல. பிரெஞ்சிந்திய மக்களின் உரிமைக் குரல்தான், அவருக்கு அந்த நல்லெண்ணத்தைக் கொடுத்திருக்கிறது. இதை ஒரு படிப்பினையாகக் கொண்டு, இந்தியத் துணைக்கண்டத்திற்கு உரிமை கொடுக்க முன்வந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் போல், திராவிடர்களின் உரிமை வேட்கையை மதித்து நடக்க வேண்டியது, பிரதமர் பண்டிதரின் நீங்காக் கடமையாகும். அவர், அப் படிப்பினையை உதறித்தள்ளி ஏகாதிபத்தியப் பாதையைத் தொடருவாரானால், பிரெஞ்சிந்திய மக்களின் உரிமைக் குரல் உரம் பெற்றுவிட்டது கண்டு, அதை மதித்து நடக்க மெண்டே பிரான்ஸ் வந்ததுபோல், திராவிடரின் உரிமைக் குரலும் தேவையான அளவில் உரம் பெற்றால், பண்டிதரே மனமாற்றம் பெறுவார்; இல்லையானால், அவருக்குப் பிறகு வருகிறவர் கண்டிப்பாகப் பணிந்தே தீருவார்! பிரெஞ்சிந்திய விடுதலை வரலாறு இந்த உண்மையைத்தான் நமக்கு போதிக்கிறது. எனவே, பிரெஞ்சிந்தியா விடுதலை பெறுவது நமக்கு மகிழ்சியில் ஒரு மாசாகவே தெரிகிறது!

பாவோடாய் நாணயம்

செல்லாது என உத்திரவு

வியட்மின் சர்க்கார், இனிமேல் வியட்மின் நாடு முழுமையிலும், வியட்மின் சர்க்கார் நாணயமே செல்லுபடியாகும் என்றும், வியட்நாம் அதிபர் பாவோடா வெளியிட்ட நாணயங்கள் வியட்மின் பகுதியில் செல்லுபடியாகாதென்றும் உத்திரவிட்டிருக்கின்றனர்.

வேலையற்றோர் அடிமை முகாம்கள்!

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க கட்டாயத் திட்டம்!

சீன அரசாங்கத்தின் சாதனை பற்றி பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு!

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க கம்யூனிஸ்டு சீன அரசாங்கம், வேலையற்றோரை அடிமைத் தொழில் முகாம்களுக்கு அனுப்புகின்றனர் என்று சீனப் போது பாதுகாப்பு அமைச்சர் லோஜுயி-சிங், பீகிங் வானொலியில் பேசுகையில் தெரிவித்தார்.

தொழில் துறையில், சோவியத் நிபுணர்களின் உதவியுடன் சீன சர்க்கார் சிறந்த சீர்திருத்தங்களைச் செய்துள்ளனர் என்று சீன அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

புதிய தொழில் விதிகளின்படி சீனாவில் உள்ள வேலையற்றோர், அடிமைத் தொழில் முகாம்களுக்குக் கட்டாயமாக சர்க்காரால் அனுப்பப்படுகின்றனர்.

பீகிங் வானொலியில் அமைச்சரால் வெளியிடப்பட்ட அறிக்கை கூறுவதாவது :—

"சர்க்கார், இவர்களின் வாழ்க்கைப் பிரச்சினையைத் தீர்த்துள்ளது. சீனக் கம்யூனிஸ்டு கட்சியினர், வேலையற்ற தொழிலாளிகள், புரட்சியின் எதிரிகள், கிளர்ச்சிக்காரர்கள் ஆகியோர் அனைவருக்கும் அரசியல், தொழில் கல்வி ஊட்டி, அவர்களைப் புதிய மனிதர்களாக்கத் திட்டமிட்டுள்ளபடிதான், இந்தத் தொழில் முகாம்கள் நடைபெறுகின்றன."

பீகிங் அருகே உள்ள சின்கோப் பண்ணையிலிருந்து இந்த ஆண்டில் 5,384 அடிமைத் தொழிலாளர்கள் விடுதலை செய்யப்பட இருந்தனர் என்றும், ஆனால் வெளியில் வேலைகள் கிடைக்கும் என்ற நிலை இல்லாததால் அவர்களில் 1,455 பேர் விடுதலை செய்யப்படவில்லை என்றும் தெரிகிறது.

அடிமைகளாக வேலை வாங்கப்படும் இந்தத் தொழிலாளர்கள் சீனாவில் இதுவரை 200 கோடி செங்கற்கள், 77 கோடி ஓடுகள், 17 லட்சம் நீராவியினால் இயங்கும் வெப்பமூட்டும் அமைப்புகள், 7,14,800 டஜன் மேஜோடுகள் ஆகியவற்றைச் செய்துள்ளார்களாம்.

"இந்த அடிமைத் தொழிலாளர்கள், நீண்ட இருப்புப் பாதைகளை அமைத்துள்ளார்கள்; நீர்த் தேக்கங்கள் பலவற்றைக் கட்டியுள்ளார்கள்; சர்க்காருக்காக ஏராளமான வீடுகளைக் கட்டியிருக்கிறார்கள்; தேக்கு மரங்களைப் பக்குவப்படுத்தியுள்ளார்கள்,'' என்று பீகிங் வானொலி கூறியது.

இதுபோல் அடிமைத் தொழிலாளர்கள் பலவித ஆக்க வேலைகளுக்குப் பயன்பட்டுள்ளதுமின்றி, சர்க்காரின் செலவினங்களை கணிசமான அளவு குறைத்து, நாட்டின் செல்வத்தைப் பெருக்கியுள்ளனர் என்றும் அந்த அறிக்கை மேலும் தெரிவித்தது.

வயது வந்த தொழிலாளர்களுக்கு மட்டுமின்றி 13 முதல் 17 வயதுள்ள இளைஞர்களுக்கும் சீனாவில் தொழில் முகாம்கள் உள்ளனவென்றும், இவர்கள் கடந்த நான்காண்டு காலத்தில் 1667 ஏக்கர் நிலங்களைப் பண்படுத்தியுள்ளனர் என்றும் கூறப்பட்டது.

வேலையற்றோர் 'நாய்கள்' போன்றவர்களாம்!

அமெரிக்க அமைச்சரின் பேச்சுக்கு எதிர்ப்பு

அமெரிக்க சர்க்காரின் பாதுகாப்பிலாகா செயலாளர் சார்லஸ் வில்சன், அமெரிக்காவில் உள்ள வேலையில்லாதவர்களை நாய்களுக்கு ஒப்பிட்டுப் பேசியுள்ளதைக் கண்டித்து வால்டர் ரூதர் என்னும் தொழிலாளர் தலைவர் ஒருவர், ஐசன்ஹோவருக்கு தந்தி அனுப்பியுள்ளார்.

பத்திரிகை நிருபர்கள் அடங்கிய கூட்டமொன்றில், வேலையில்லாத் திண்டாட்டம் பற்றிக் கேட்டபோது, 'தெருவில் உள்ள நாய்கள் உணவு தேடி வெளியே செல்வதை விரும்புகின்றன; ஆனால், கொட்டடிக்குள் வாழும் நாய்களோ, எதும் செய்யாது உட்கார்ந்து கொண்டு, அடிக்கடி குலைக்கின்றன,'' என்று சார்லஸ் வில்சன், கூறினாராம்!

மோட்டார்கள் உற்பத்தி செய்யப்படும் மிச்சிகன் பகுதியில், கிறிஸ்லரின் புதிய மாடல் கார்கள் உற்பத்தியின்போது, இப்போது அங்கே வேலையில்லாதுள்ள பலரின் வேதனை நீங்குமென்று வில்சன் மேலும் கூறினாராம்.

ஏராளமானவர்களைத் தேவையின்றி மோட்டார் தொழிலில் சேர்த்துவிட்டு, இப்போது அவர்களில் பலரை வேலையிலிருந்து நீக்கிவிட்டார்களென்றும், இப்படி வேலையினின்றும் நீக்கப்பட்டோரில் நிரந்தர, தற்காலிக சிப்பந்திகளும் உள்ளனர் என்றும், இந்த நிலையில், உங்கள் பாதுகாப்பு இலாகா செயலாளர் (அமைச்சர்) வேலையற்று இருப்போரை, 'நாய்கள்' என்று விவரிக்கிறார்'' என்றும் வால்டர் ரூதர் ஐசன்ஹோவருக்கு தந்தியடித்துள்ளார்.

ரூதர், தொழில் அமைப்பு கழகம், ஆட்டோ தொழிலாளர் கழகம் ஆகியவற்றின் காங்கிரசின் தலைவர் ஆவார்.

ஏற்பது இகழ்ச்சி!

பர்மிய நாட்டு முன்னேற்றத்திற்கு வெளிநாட்டு உதவியைப் பெறுவது குறித்து, பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில், பிரதமர் யூ-நு, "யாரிடமிருந்தும் இலவசமாக எந்தவித உதவியையும் பர்மா பெற்றுக்கொள்வதை நான் விரும்பவில்லை. மாறாக, பர்மாவில் உற்பத்தியாகிற அரிசி, தேக்கு மரம், ரப்பர் இவைகளை மாற்றுப் பொருள்களாக ஏற்றுக் கொண்டு உதவி செய்வதை நான் வரவேற்கிறேன்.'' என்று கூறியிருக்கிறார்.

சயாம் மன்னரைக் கொன்ற மூவர் தூக்கிலிடப்படுவர்!

சயாம் நாட்டு தலைமை உயர் நீதிமன்றம், கடந்த எட்டு ஆண்டுகளுக்கு முன்னால் சயாம் நாட்டு மன்னரைக் கொலை செய்தவர்களுக்குத் தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளதாம்.

கூத்துக் கலையை ஊக்குவிக்க!

பம்பாய் அரசாங்கம் பணம் ஒதுக்கியுள்ளது!

பம்பாய் அரசாங்கம், நாடகங்களை எழுதுவதையும் நடிப்பதையும் ஊக்குவிக்கிற முறையில் நாடகத் துறை வளர்ச்சிக்காக ரூ. 2,59,000 செலவிட அனுமதியளித்துள்ளது.

இந்த ஆண்டில் செலவிடப்படும் தொகையில், பல திறந்த வெளி நாடக அரங்கங்களும் அமைக்கப்படும் எனத் தெரிகிறது.

நாடகங்களின் மூலமாக வாங்கும் தமாஷா வரியிலிருந்து ரூ. 3 லட்சத்திற்கு அதிகமாக தொகையைச் செலவிட்டு நாடகங்களை ஊக்குவிப்பதென்ற பம்பாய் அரசாங்கத்தின் முடிவின்படியே இத்தொகை செலவிடப்படுகிறது.

ஐ. நா.-வுக்கு சீனப் பிரதமர் தந்தி

பார்மோசாவிடுதலை உலகசமாதான முக்கியத்துவம் பெற்றது!

சீன தேசீய வாதிகள் தஞ்சம் புகுந்திருக்கிற பார்மோசா தீவை விடுவிக்கிற பிரச்னை சீனாவின் உள்நாட்டு விவகாரமாகும்; அதில் எந்த வெளிநாட்டாரின் தலையீட்டையும் அனுமதிக்க முடியாது;

சீன மக்கள், பார்மோசாவை விடுவிப்பதின் மூலம் தங்களது சுதந்திரத்தையும், ஒற்றுமையையும், நாட்டின் எல்லையையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறார்கள் என்பது மட்டுமின்றி, ஆசியாவினுடையவும், உலகத்தினுடையவும் சமாதானத்தையும், பாதுகாப்பையும் நிலைநாட்டிக் கொள்ள வேண்டியவர்களாகவும் இருக்கிறார்கள்.''

—என்று, செஞ்சீன அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பியுள்ள தந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, அத்தந்தியின் முழு விவரங்களும் வெளியிடப்பட்டுள்ளது.

தந்தி, சீன அரசாங்கத்தின் சார்பில் அந்நாட்டுப் பிரதமரும், வெளிநாட்டிலாகா அமைச்சருமான சௌ-என்-லாய் அவர்களால் ஐ. நா. சபையின் பொதுச் செயலாளர் டாக்டர் ஹாமார்க்ஸ்க் ஜோயெல்ட் என்பாருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சீனப் பிரதமர், ஐ. நா. சபைச் செயலாளரை, ஐ. நா. சபையின் வருகிற கூட்டத்தில், சீனப் பிரதேசமான தைவான் பகுதியில் ஆயுத ஆக்கிரமிப்புச் செய்துள்ள அமெரிக்க அரசாங்கத்தின் போக்கு குறித்து தீவிர கவனம் செலுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

சீனாவின் தந்தியில் மேலும் கண்டிருப்பதாவது :—

"சீன மக்கள், 'தைவான்' பகுதியை விடுதலை செய்வதற்கு எதிராக அமெரிக்க அரசாங்கம் செய்துள்ள ஆயுத ஆக்கிரமிப்பு முஸ்தீபை உடனடியாக நிறுத்துமாறு, ஐ. நா. பாதுகாப்புச் சபையை ஐ. நா. பொதுச்சபை தூண்ட வேண்டிய—தப்பித்துக் கொள்ள முடியாத பொறுப்பை—நிச்சயம் ஏற்றுக்கொண்டே தீர வேண்டும்.

அமெரிக்கா உடனடியாக, சீனாவுக்குச் சொந்தமான பகுதிகளான தைவான், பெங்கு, இன்னும் இதரப் பகுதிகளிலிருந்து தனது இராணுவத்தையும், ஆயுதத் தளவாடங்களையும் திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு ஐ. நா. பாதுகாப்புச்சபை உத்தரவிட வேண்டும்.''

மேலும் சீனப் பிரதமர் சௌ-யென்-லாய் தனது 'குற்றச்சாட்டுத் தந்தி'யை, சீன தேசீய வாதிகளான கோமிங்டாங் பிரதிநிதிகளைத் தவிர்த்து, மற்றெல்லோருக்கும் அறிவிக்கக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தியாவுக்கு பென்சிலின் உதவி

இந்தியாவில் பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளவர்களிடையே நிலவிவரும் தொத்து நோய்களை அகற்றுவதற்காக அமெரிக்காவிலிருந்து 18,000 குழாய்களில் பென்சிலின் மருந்து அனுப்பப்பட்டுள்ளது.

பர்மாவிலுள்ள கோமிண்டாங் துருப்புகள்

வெளியேறுமாறு ஐ. நா. சபைத் தீர்மானம்!

பர்மாவில் உள்ள வெளிநாட்டுத் துருப்புகளை அனைத்தும் தங்களிடமுள்ள போர்க் கருவிகளை சர்க்காரிடம் தந்துவிட்டு சரணடையுமாறு கோரி, ஐ. நா. சபை தீர்மானம் ஒன்று நிறைவேற்றியுள்ளது.

ஐ. நா. சபை நிறைவேற்றியுள்ள தீர்மானம், பர்மாவிலுள்ள வெளிநாட்டுத் துருப்புகள் எந்த நாட்டைச் சேர்ந்தவை என்பதைக் கூறவில்லை; ஆனால், ஐ. நா. சபையில் இதுபற்றி புகார்செய்த பர்மா, தனது நாட்டில் தேசீயச் சீனத் துருப்புகள் மறைந்து வாழ்ந்து, சர்க்காருக்கு எதிராகத் தொல்லை தருவதாகக் கூறியது.

இதுவரையில், இந்தத் துருப்புக்களில் 7,000 பேர் வெளியேறிவிட்டனர் என்றும், ஆனால், இன்னும், பர்மாவில் 6,000 பேர் இருக்கிறார்கள் எனவும் கருதப்படுகிறது.

பிரிட்டனால் முன்மொழியப்பட்ட இந்தத் தீர்மானத்தை இந்தியா, பாகிஸ்தான், ஆகிய நாடுகள் ஆதரித்தன.

அத் தீர்மானம் உருவாக ஆஸ்திரேலியா, கனடா, இந்தோனேஷியா, நியூசிலாந்து, நார்வே, ஸ்வீடன், உருகுவே ஆகிய நாடுகள் காரணமாயிருந்தன.

அரிசனங்களுக்கு வீடு!

மெர்க்காரா, அக். 12—

அரிசனங்களுக்குக் குடியிருப்பு வீடுகள் கட்டிக் கொள்வதற்காக 30 ஏகர் நிலத்தை இனாமளிப்பதாக கைசேரி எனும் கிராமத்தைச் சேர்ந்த ஜம்மதா ஆச்சப்பா என்பார் அறிவித்துள்ளார்.

அந்தக் கிராமத்தில் கடந்த 8-ந் தேதியன்று நடைபெற்ற அரிசன வார விழாவில் கலந்துகொண்ட அவர், இந்தத் தானம் செய்வதாக அறிவித்தார்.

குடகு ராஜ்ய உள்நாட்டு மந்திரி மல்லப்பா, "சர்க்கார், அரிசனங்களை முன்னேற்றுவதற்குத் தங்களாலான முயற்சிகளை எல்லாம் செய்து வருகிறது; சமூக வாழ்வில் தங்களை உயர்த்திக்கொள்ள அரிசனங்கள் தாங்களாகவே முயற்சிக்க வேண்டும்," என்று கூறினார்.

பிரதமர் பதவி இராஜினாமா!

வாழ்க்கைச் செலவைக் குறைக்க முயன்றதின் எதிரொலி!

பின்லாந்து பிரதமர் தமது பதவியை இராஜினாமாச் செய்துவிட்டதாகத் தெரிகிறது. வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் அவருடைய திட்டத்தின் காரணமாக மந்திரி சபையில் ஏற்பட்ட பிளவுகளே அவர் இராஜினாமாச் செய்யக் காரணமாயிருந்ததாம்!

குறுக்கெழுத்துப் போட்டி

தடை செய்ய ஆதரவு

புதுடில்லி, அக். 13—

அகில இந்திய பத்திரிகாசிரியர்கள் சங்கம், பத்திரிகை விசாரணைக் குழு தனது சிபார்சுகளில் குறுக்கெழுத்துப் போட்டிகளைத் தடை செய்யவேண்டுமென்று கூறியுள்ளதை வரவேற்றிருக்கிறது.

தோழர் ஜே. சி. ஜெயின் தலைமையில் நடைபெற்ற மேற்படி சங்கத்தில் பத்திரிகை தொழில் பற்றி பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தலைவர் பேசுகையில், சர்க்கார் தங்கள் சங்கத்தின் தீர்மானங்களை அனுதாபத்துடன் கவனிக்க வேண்டுமென்று கூறினர்.

நேபாள எல்லையோரக் கலவரம்

நேபாள—திபேத் எல்லையில் ஆயுதம் சேகரிப்பது மூலமாகவும், மற்ற எதிர்ப்பு நடவடிக்கை மூலமாகவும், பலர் சர்க்காருக்கு எதிராக கிளர்ச்சி செய்வதில் திபேத்தியர்களும் கலந்துகொண்டதாக கூறப்படுவது மிகைப்படுத்தப்பட்ட செய்தியாகும் என்று நேபாள சர்க்கார் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

சோலுவின் எல்லையோரத்தில் சில சிறு தகராறுகள் ஏற்பட்டனவென்றும், அவைகளில் நேபாளியர்கள் மட்டுமே கலந்து கொண்டனர் என்றும், திபேத்தியர் யாரும் கலந்து கொள்ளவில்லை என்றும் அந்த அதிகாரி மேலும் கூறியுள்ளார்.

அன்னிய தொழில் நிலையங்களில் இந்தியர்கள் எண்ணிக்கை அதிகரிக்கிறது!

வர்த்தக இலாகா தரும் புள்ளி விவரங்கள்

இந்தியாவிலுள்ள, வியாபார, மற்றும் தொழில் அமைப்பு நிலையங்களில் ரூ. 1000-த்துக்கு மேற்பட்ட சம்பளம் பெறுவோர் தொகை 1947-ம் ஆண்டில், 7·5 சதவிகிதமாக இருந்தது என்றும், 1954-ம் ஆண்டில் 32 சதவிகிதமாக உள்ளது என்றும், இந்த உயர்வு வரவேற்கத்தக்கது என்றும் கூறப்படுகிறது.

இந்தியாவிலுள்ள வெளிநாட்டு தொழில் நிலையங்களில் இந்தியர்களை வேலைக்கு அமர்த்தும் பழக்கம் ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது என்றும், சர்க்காரின் கட்டாயமின்றியே இது நடைபெறுவது கண்டு மகிழ்வதாகவும் இந்திய சர்க்காரின் வர்த்தக அமைச்சராலயம் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பொன்று தெரிவித்துள்ளது.

ரூ. 300 முதல் ரூ. 400 வரை சம்பளம் உள்ள கீழ்த்தர சிப்பந்திகளைப் பற்றிய மட்டில் 98 சதவிகிதத்தினர் இந்தியர்கள்தான் என்று தெரிகிறது.

வெளிநாட்டுக்காரர்கள் அதிகம் உள்ள இந்திய தோட்டத்தொழில்களில், அதிகமான இந்தியர்களை வேலைக்கமர்த்தும் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறதாம்.

1947-ல், இக்கம்பெனிகளில் மொத்தம் 7,623 வெளி நாட்டினர் இருந்தனர் என்றும், இப்போது 7,750 பேர் உள்ளனர் என்றும் தெரிகிறது.

அதேபோல் இக்காலத்தில் வெளிநாட்டுக் கம்பெனிகளிலுள்ள இந்தியர்களின் எண்ணிக்கை 6,162-லிருந்து 18,612 ஆக உயர்ந்துள்ளதாம்.

இந்தியர்களை வேலைக்கமர்த்தும் பழக்கம் இந்தியாவிலுள்ள வெளிநாட்டு நிலையங்களில் அதிகமாகிக் கொண்டு வருகிறது என்றாலும், ரூ. 1,000-த்துக்கு மேற்பட்ட சம்பளக்காரர்களைப் பொறுத்தமட்டில் சில வகைத் தொழில்களில் அதிக முன்னேற்றம் காணப்படவில்லை என்று தெரிகிறது.

சணல் தொழிற்சாலை, பாங்கிகள், சர்க்கரைத் தொழிற்சாலை, மதுவகைத் தொழிற்சாலைகள் ஆகியவற்றில் 75 சதவிகிதத்தினர் வெளிநாட்டுக்காரர்கள் என்று கூறலாம்.

அதுபோலவே, பருத்தி, எஞ்சினீயரிங், இன்சூரன்ஸ் போன்ற தொழில்களில் சுமார் 50 சதவிகிதத்தினர் வெளிநாட்டுக்காரர்கள் என்றும் தெரிகிறது.

தற்போது இந்தியாவில் உள்ள வெளிநாட்டுத் தொழில் நிலையங்களில் உள்ள வேற்று நாட்டவர் 7,750 பேர்களில், 6,747 பேர் பிரிட்டிஷ்காரர்கள் என்றும், 230 பேர் அமெரிக்கர்கள், 147 பேர் சுவிட்சர்லாந்தினர், 80 பேர் ஜெர்மானியர், 67 பேர் டச்சுக்காரர்கள், 55 பேர் சுவீடன் மக்கள், 45 பாகிஸ்தானியர், 40 பேர் சீனர்கள் என்றும் வர்த்தக இலாகா பத்திரிகைக் குறிப்பு தெரிவிக்கிறது.

சூறாவளியின் கொடூரம்!

ஊர்கள் மறைந்தன; பிணங்கள் குவிந்தன!

மியாமி (யு. எஸ்.), அக். 14—

மேற்கிந்தியத் தீவுகளில், ஏற்பட்ட சூறாவளியினால் பெருமளவு சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

115 மைல் வேகத்தில் தாக்கிய இச்சூறாவளியின் விளைவாக, வடபஹாமாவில் நூற்றுக்கணக்கான மக்கள் இறந்தனர் என்றும் வீடுகள் பல சின்னாபின்னமாக்கப்பட்டன என்றும், ஹைட்டி எனும் பகுதியிலுள்ள ஊர்கள் பிணக்காடுகளாகக் காட்சியளிப்பதாகவும் தெரிய வருகிறது.

இந்தச் சூறாவளியுடன் சேர்ந்து பலத்த மழையும் பெய்ததாம். மத்திய அமெரிக்காவும், அதை அடுத்த தீவுகளும் வெள்ளப் பிரளயங்களாகக் காணப்படுகின்றனவாம்! மேலும், ஹைட்டியில் உள்ள ஆக்ஸ்-கேஸ் எனும் துறைமுகத்தில் சுமார் 200 பேர் கொல்லப்பட்டதாகவும், ஏறக்குறைய 350 பேர் படுகாயப்பட்டதாகவும், ஜெரமீ எனும் நகரம் அடியோடு அழிந்துவிட்டதாகவும் தெரிய வருகிறது.

ஜெரமீ என்ற அந்த நகர மக்களின் கதி பற்றிய விவரங்கள் ஏதும் தெரியவில்லையாம்!

கம்யூனிச எதிர்ப்பு நடவடிக்கை!

நைஜீரிய சர்க்கார் தீவிரம்

நைஜீரிய கூட்டாட்சியின் சர்க்கார் அலுவலகங்களில் வேலை பார்க்கும் முறையில் கம்யூனிஸ்டுகள் உள் நுழைவதைத் தடுக்க சர்க்கார் போதுமான நடவடிக்கைகள் எடுத்துள்ளனர்.

வருங்காலத்தில் கம்யூனிஸ்டு அனுதாபமுள்ளோர் எவரும் நிர்வாகம், போலீஸ், தந்தி, ரயில்வே, விமானப் போக்குவரத்து ஆகிய எந்த இலாகாவிலும் நியமிக்கப்பட மாட்டார்கள் என்றும், நாட்டின் முக்கிய பொது பதவிகளில் அவர்கள் நியமிக்கப்பட மாட்டார்கள் என்றும், சர்க்கார் கூறியுள்ளது.

நைஜீரிய கூட்டாட்சியில் 3,00,00,000 பேர் உள்ளனர்; காமன்வெல்த்திற்குள், சுதந்திர நாடாக நைஜீரியா விளங்க வேண்டுமென்று சர்க்கார் விரும்புகிறதாம்.

நைஜீரியாவின் எதிர்கால எண்ணங்களை நாசமாக்குவது பற்றி சர்க்கார் எச்சரிக்கையாக இருந்து பாதுகாப்புடன் இருக்கவே இந்தக் கம்யூனிச எதிர்ப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று சர்க்கார் தரப்பில் கூறப்படுகிறது.

பட்டம்சர்க்கார் கொட்டம் அடங்க....

அக். 24—அடக்குமுறை கண்டன நாள் கொண்டாடுக!

தமிழக மக்களுக்கு காந்திராமன் வேண்டுகோள்

"அக்டோபர் திங்கள் 24-ந் தேதியன்று, தமிழகமெங்கும், திரு—தமிழக அடக்குமுறைக் கண்டன தினமாக ஆர்ப்பாட்டங்கள், கூட்டங்கள் ஆகியவைகள் நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்; தமிழ் நாட்டில் உள்ள மக்களுக்கு இதில் விசேடப் பொறுப்புண்டு; தமிழ் நாட்டிலுள்ள சகல கட்சிகளும், பொது நிறுவனங்களும் இக் காரியத்தில் விசேட சிரத்தை எடுத்துக்கொண்டு, திரு—தமிழகத்திலுள்ள சகோதர தமிழ் மக்களை, திரு—கோச்சி சர்க்காரின் கொடிய அடக்குமுறைகளிலிருந்து விடுவிக்கும் பணியில் தவறக் கூடாது என்று, அவர்களை, திரு—தமிழக மக்களின் சார்பில் வேண்டுகிறேன்; ஆகவே, அக்டோபர் திங்கள் 24-ந் தேதியன்று, தமிழ் நாடு பூராவிலும், அத்தினத்தை அடக்குமுறைக் கண்டன தினமாக மேற்கொண்டு மக்கள் தங்கள் குரலை எழுப்ப முன்வரவேண்டுமென்று கேட்டுக் கோள்கிறேன்''

—என்று, தி. த. நா. காங்கிரஸ் கமிட்டி உருப்பினரும், திரு—தமிழர் போராட்டத் தளபதியுமான காந்திராமன் அவர்கள் தாம் விடுத்துள்ள அறிக்கை யொன்றில் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

மேலும் அந்த அறிக்கையில் கண்டிருப்பதாவது :—

"திரு—தமிழக மக்களின் போராட்டத்தை நசுக்குவதற்காக மார்த்தாண்டம், புதுக்கடை ஆகிய இடங்களில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தைப் பற்றி விசாரிக்க, பட்டம் தாணு மந்திரி சபை நியமித்துள்ள ஒற்றை நபர் கொண்ட கமிட்டியை நிராகரிக்க வேண்டும்.''

"இந்த விசாரணை வெறும் கண்துடைப்பு வேலைதான்; தாணு மந்திரி சபையின் கொடிய அடக்குமுறைகளுக்குத் திரை போடுவதுதான் இதன் நோக்கம். இவ்விசாரணைக் கமிட்டி அமைக்கப்பட்டிருக்கும் முறை, மந்திரி சபை கடைப்பிடிக்கும் கொள்கை ஆகியவற்றிலிருந்து இவ்வுண்மை தெளிவாகத் தெரிகிறது.

"சில பகுதிகளில் வாழும் மக்களில் ஆண்களே இல்லை; அப்பிரதேசங்களில் வசிப்பதற்கே பாதுகாப்பு கிடையாது. சுமார் 500-பேர்களுக்கு மேல் முக்கிய தலைவர்களும், தொண்டர்களும் சிறைக்குள்ளே கிடக்கின்றனர்; பலர் ஊரை விட்டே வெளியேறி விட்டனர்; இப்பிரதேசத்திலிருந்து கீழ் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் 4 பேர் சிறையில் பூட்டப்பட்டுக்கிடக்கிறார்கள். மற்றையோர் ஊருக்குள் வரமுடியாமல் வெளியே இருக்கிறார்கள். இதே நிலைமையில்தான் ஊரிலுள்ள பஞ்சாயத்துக் குழு தலைவர்களும், உறுப்பினர்களும் இருக்கின்றனர்.

ஆனால், இன்னும் இந்தக் கொடிய நிலைமை மாறினபாடில்லை. இந்த விசாரணைக் கமிட்டி அமைக்கப்பட்ட பின்னரும்கூட, நாகர்கோவில் நகரசபை தலைவர் அனந்தராமன் கைது செய்யப்பட்டிருக்கிறார்; இன்னும் 60 பேருக்கு மேற்பட்டவர்கள் மீதும் புதிய 'வாரண்டு' உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளனவாம்.

ஆகவே இப்படிப்பட்ட நிலைமைகளை முறியடிப்பதற்காக, அடக்குமுறையை நிறுத்தி, சிறையிலுள்ளவர்களை விடுவித்து, 'வாரண்டு'களை எல்லாம் ரத்து செய்து, விசேஷப் போலீசையும் உடனே 'வாபஸ்' வாங்கி, திரு—தமிழகத்திலுள்ள போலீஸ் அதிகாரிகளையும் மாற்றி, திரு—கொச்சி மாநிலத்தைத் தவிர்த்து மற்றெந்த மாநிலத்தையும் சேர்ந்த நேர்மையாளர்களைக் கொண்டு விசாரணை நடத்த வேண்டுமென்று திரு—கொச்சி சர்க்காரைக் கோரி, மக்கள் தொடர்ந்து கிளர்ச்சி நடத்த வேண்டுமென்பது அவசர அவசியமாகிவிட்டது.''

முன்னாள் அமைச்சர் மீது யு-நூ குற்றச்சாட்டு!

மதக் கலவரத்தை தூண்டுகிறாராம்!

"பர்மாவின் முன்னாள் அமைச்சர்களில் ஒருவரான யு-பா-பி என்பவரும், மற்றும் சில எதிர்க்கட்சிக்காரர்களும், சர்க்காருக்கு விரோதமாக, புத்த பிட்சுக்களிடையே எதிர்ப்புணர்ச்சியைத் தூண்டி, நாட்டில் கலவரம் நிகழுமாறு செய்ய முயற்சிக்கிறார்கள்," என்று பர்மியப் பிரதமர் யு-நூ கூறினார்.

தமக்கு இது பற்றிய புகார்கள் வந்துள்ளதாகவும், யு-பா-பியின் எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்து தக்க ஆதாரங்கள் இல்லையென்றாலும், சர்க்காருக்கு விரோதமான காரியங்களில் ஈடுபட்டு, மதக் கலவரத்தைத் தூண்டிவிடுவதாகத் தன்னால் குறிப்பிட முடியும் என்றும் யு-நூ மேலும் கூறினார்.

இதுபோன்ற நிகழ்ச்சிகளில் சர்க்கார் உறுதியான நடவடிக்கைகள் எடுக்கத் தயங்காது என்றும் யு-நூ மேலும் கூறியுள்ளார்.

யு-பாவும், அவரது மூன்று ஆதரவாளர்களும் 1952-ம் ஆண்டில் சர்க்காருக்கு எதிராக இராணுவப் புரட்சி ஒன்றைத் தூண்டினார்களென்றும், தங்கள் தவறுகளை உணர்ந்து அவர்கள் திருந்திக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையிலேயே யு-பா போன்றோர்மீது நடவடிக்கை எடுக்காது விடப்பட்டது என்றும், தற்போதைய நிலை வேறு என்றும் யு-நூ கூறியுள்ளார்.

தன்மீதுள்ள குற்றச்சாட்டுகளை மறுத்து யு-பா-பி கூறுகையில், இராணுவப் புரட்சி செய்யுமாறு, தான், ஜெனரல் நீ-வின்னிடம் கேட்கவில்லை என்றும், இப்போது புத்த பிட்சுக்களிடையே காணப்படும் கருத்து வேற்றுமைகள் எல்லாம் அவர்களை மதியாது, அவர்களிடம் மன்னிப்புக் கேட்க யு-நூ தவறியதால் ஏற்பட்ட விளைவு என்றும் கூறினார்.

பர்மாவில் - மதப்பூசல்!

பிரதமர் கண்டிக்கிறார்!

பர்மா ஒரு புத்தமத நாடாக மாற்றப்பட வேண்டுமென்று கோரி மதப்பூசல்களைக் கிளப்புகிறவர்கள் மீது பர்மிய அரசாங்கம் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளத் தயங்காதென பர்மியப் பிரதமர் யூ-நூ குறிப்பிட்டுள்ளார்.

"வகுப்புக் கலவரங்களை உண்டு பண்ண சிலர் முயற்சிக்கிறார்கள் என்பதற்கான ஆதாரங்கள் எங்களுக்குக் கிடைத்திருக்கின்றன. அத்தகைய கலவரங்களை மூட்டி விடுபவர்மீதும் கடுமையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும்' என்றும் பர்மா பிரதமர் பத்திரிகை நிருபர்களிடையில் பேசுகையில் குறிப்பிட்டார்.

நான்காண்டுகளுக்கு முன், பர்மியத் தலைவர்களில் சிலர் சர்க்காரைக் கவிழ்க்க முயற்சித்தனர். ஆனாலும் அப்போது அரசாங்கம் அவர்கள் மீது எத்தகைய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. ஆனால், இப்போது அத்தகைய முயற்சியில் இனி யாரேனும் ஈடுபட்டால் அரசாங்கம் வாளாவிருக்காது."

...என்ற தகவலையும் யூநூ வெளியிட்டார்.

சர்க்கார் பள்ளிகளில் மத போதனை செய்வது பற்றி சின்னாட்களுக்கு முன் எழுந்த தகராறின் விளைவாகத்தான் இப்போது பர்மாவை, புத்தநாடாக ஆக்க வேண்டும் எனும் கிளர்ச்சி நடைபெறுகிறதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கழகக் கூட்டங்கள்

★

சென்னை (இராயபுரம்)
பம்பிங் ஸ்டேஷன் தெரு,
(தலைமை கழகம் அருகாமையில்)
17—10—54 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
சி. என். அண்ணாதுரை
அ. பொன்னம்பலனார்
வி. எஸ். கோவிந்தராசன்

★

செம்பியம் (சென்னை)
குருசாமிகிராமணியார் தோட்டம்,
பெரம்பூர்
(வினஸ் டாக்கீஸ் அருகில்)
18—10—54 மாலை 6 மணிக்கு
தலைவர்: ஏ. கே. சாமி, எம். சி.
பேசுவோர்:
சி. என். அண்ணாதுரை
முகவை ஆர்.எஸ்.பாண்டியன்

சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம்

17-10-54 காலை 10 மணிக்கு, மதுரை மீனாட்சி டாக்கீசில், தோழர் சி. பி. சிற்றரசு உடல் நல பாதுகாப்பு நிதிக்காக, தோழர் அருணாசலம் தலைமையில் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம் நடைபெறும். 'சுதந்திர தந்தை ரூசோ' என்னும் பொருள் பற்றி தோழர் சி. பி. சிற்றரசு சொற்பொழிவாற்றுவார். தோழியர் பி. எஸ். செல்வா இன்னிசை வழங்குவார். கட்டணம்: அணா 8, 4.

சென்னை 6-வது வட்ட தி. மு. கழக பொது உறுப்பினர்கட்கு

17—10—54 காலை 8 மணிக்கு வியாசர்பாடியில், சென்னை 6-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

எழும்பூர் (32-வது வட்டம்)

அறிவு வளர்ச்சி மன்ற நிதிக் கூட்டம்

17—10—54 ஞாயிறு காலை **10**-மணிக்கு பெரம்பூர் லட்சுமி தியேட்டரில் நடைபெற இருந்த நிதிக் கூட்டம் **7—11—54** ஞாயிறு காலை **10**-மணிக்கு நடைபெறும்.

இதுவரை விற்பனை செய்யப்பட்ட நுழைவுச்சீட்டுகள் அன்றையக் கூட்டத்திற்குச் செல்லுபடியாகும் என்பதைக் கழகத் தோழர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ஏ. கே. முத்தரசு,
செயலாளர்

அமெரிக்க நீதிபதியின் நடுநிலையில் சந்தேகம்!

ஒருதலைப்பட்சமாக நடக்கலாம் எனக் குற்றச்சாட்டு!

வாஷிங்டன், அக். 15—

லியோ ஏ. ரோவர் என்ற வழக்கறிஞர் ஒருவர் நீதிபதி ஒருவரின் நடுநிலையைச் சந்தேகித்து, அவர் ஒரு குறிப்பட்ட வழக்கிலே விசாரணை நடத்தக் கூடாதெனக் கோரி மாவட்ட நீதிமன்றம் ஒன்றிற்கு விண்ணப்பித்துள்ளார் என்று தெரிகிறது.

பேராசிரியர் லாட்டிமோர் என்பவர் தூரகிழக்குப் பிரச்சினை குறித்து எழுதும் ஒரு எழுத்தாளர்; விரிவுரையாளருங்கூட!

அவர் ஒரு 'செனட் கமிட்டி' முன் சாட்சியம் கூறுகையில், கம்யூனிஸ்டு கட்சிப் பாதையைப் பின்பற்றுபவனாக என்றுமே இருந்ததில்லை என்று பொய் கூறியதாக இப்போது விசாரிக்கப்படவிருக்கிறார்.

அவரை விசாரிக்க இருக்கும் 'பெடரல் கோர்ட்' நீதிபதியான லூதர் யங்தால் என்பவர், ஒரு தலைப்பட்சமாக நடந்துகொள்ளலாமெனவும், அவரது நடுநிலைமையில் தனக்கு சந்தேகமிருப்பதாகவும் ரோவர் என்ற வழக்கறிஞர் மாவட்ட நீதிமன்றத்தில் முறையிட்டுள்ளார். அந்த வழக்கறிஞர் தனது குற்றச்சாட்டிற்கு ஆதாரமாக, அந்த நீதிபதி, முன்பு பேராசிரியர் லாட்டிமோர் மீது சாட்டப்பட்ட குற்றங்கள் ஏழில் நான்கைத் தள்ளுபடி செய்தார் என்பதையும், அவர் தள்ளுபடி செய்த குற்றச்சாட்டுக்கள் பின்னர், 'அப்பீல் கோர்ட்டி'ல் மீண்டும் விசாரணை செய்யப்பட்டதென்பதையும் காட்டியுள்ளார் எனத் தெரிகிறது.

ஐம்பது ஆண்டுகளாக நாட்டை....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

காலமாக பிரிட்டிஷார் செய்துவரும் கொடுமைகளே இதற்குக் காரணமானவையாகும்."

—இவ்வாறு, ஈரான் பாராளுமன்ற கீழ் சபையில், ஈரானின் புதிய எண்ணெய் ஒப்பந்தம் விவாதிக்கப்படுகையில், எதிர்க்கட்சியினைச் சேர்ந்தவரும், புதிய ஒப்பந்தத்தை மிகக் கடுமையாக எதிர்ப்பவருமான அபோல்ஹோசின் ஹரீ சடாஹ் என்பவர் கூறினார்.

பிரிட்டனின் மீது அபோல்ஹோசின் இப்படிக் குற்றம் சாட்டியபோது பாராளுமன்றத்தில் உள்ள உறுப்பினர்கள், "அது சரியான காரணமே" என்று முழக்கமிட்டார்களாம்.

ஈரான் பாராளுமன்றத்தின் கீழ் சபை விவாதத்திற்குப் பின்னர் புதிய ஒப்பந்தம் மேல் சபையான செனட்டின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும். அதன் பின்னர் மன்னரின் ஒப்புதல் கிடைக்க வேண்டும்.

ஒப்பந்தத்தை விரைவில் நிறைவேற்றி நவம்பர் திங்கள் முதல் நாளன்று அபேதான் எண்ணெய்க் கிணறுகளில் வேலை துவங்கலாம் என்று ஈரான் சர்க்கார் நம்புகின்றனர்.

ஒப்பந்தத்தை எதிர்த்துப் பேசுகையில், அபோல்ஹோசின் கூறியதாவது:—

"நஷ்ட ஈடு பெற வேண்டிய நாடு பிரிட்டனல்ல; நமது நாடுதான் நஷ்ட ஈடு பெற வேண்டும்; ஏனெனில், அபேதானிலுள்ள ஆங்கிலோ-ஈரானிய எண்ணெய் நிலையங்கள் அனைத்தும் 1901-ம் ஆண்டு ஒப்பந்தப்படி ஈரானுக்குச் சொந்தமானவைகளே!

'பிரிட்டன் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதே கிடையாது; அதே நேரத்தில் ஈரான், தனது வாக்குறுதிகளை முறித்துவிட்டது,' என உலகினரை நம்பச் செய்துள்ளார்கள். லஞ்சம் கொடுத்து, பயமுறுத்தி, கட்டாயமாக நம்மீது 1921-ம் ஆண்டு ஒப்பந்தம் திணிக்கப்பட்டது; இப்போது ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் அனைத்தையும்விட மிகவும் மோசமானதாகும்," என்றார்.

சீன சர்க்கார் சட்டபூர்வமானதல்ல!

அமெரிக்க சர்க்காரின் தவறான போக்கு!

"கம்யூனிஸ்டு சீன சர்க்கார் சட்ட அனுமதி பெற்ற சர்க்கார் அல்ல," என்று ஐ. நா. சபை முன்னர் அமெரிக்கா இன்று கூறியது.

சீனாவை அமெரிக்க சர்க்கார் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் மூலம் துன்புறுத்துவதாக புகார் செய்து ஐ. நா. சபைக்கு சீனப் பிரதமர் சௌ-யென்-லாய் தந்தி ஒன்று கொடுத்திருக்கிறார் அல்லவா? (செய்தி 3-ம் பக்கத்தில் வெளியாகியுள்ளது.) இந்தத் தந்தியின் பிரதிகளை வழக்கம்போல் ஐ. நா. சபையின் செயலாளர் எல்லா உறுப்பினர் நாடுகளுக்கும் அனுப்பினார்.

தந்தியின் பிரதியைக் கொண்டு வந்தபோது, ஐ. நா. சபையில் உள்ள அமெரிக்காவின் நிரந்தரப் பிரதிநிதியான ஹென்ரி காபட் லாட்ஜ் வாங்க மறுத்துவிட்டார்.

இப்படி மறுத்ததின் மூலம், 'சீனாவானது சட்டபூர்வமான சர்க்கார் அல்ல,' என்று அமெரிக்கா எடுத்துக் காட்டியிருக்கிறது.

தங்கள் ஆட்சேபணைகளை அமெரிக்கப் பிரதிநிதி எழுத்து மூலமும் தெரிவித்திருக்கிறாராம்.

குன்றின் குறுக்கீடு!

திருவனந்தபுரம்—மதுரை ரயில்வே பாதையில், மதுரைக்கருகில் உள்ள ஒரு குன்றிலிருந்து ஒரு பெரிய பாறை சரிந்துவிழுந்ததின் காரணமாக அந்தப் பாதையில் ரயில் போக்குவரத்து தடைபட்டுவிட்டதாகத் தெரிகிறது.

நகர பஸ் - போக்கு-வரத்து!

மேலும் புதிதாக 50 பஸ்!

சென்னை நகரில் ஓடும் சர்க்கார் பஸ்களின் எண்ணிக்கையைப் பெருக்குவதற்காக, அடுத்த ஆண்டில், (1955—56) ரூ. 45 லட்சம் ஒதுக்குவதென சர்க்கார் தீர்மானித்து இருக்கிறதாம்.

இதனால் மேலும் 20 பஸ்கள் புதிதாக ஓடக்கூடும் என சொல்லப்படுகிறது.

புதிதாக 50 'லேலண்ட் ராயல் டைகர்' பஸ்களை விடுவதற்காக, சென்ற ஆண்டில் ரூ. 30 லட்சம் சர்க்காரால் ஒதுக்கப்பட்டிருந்தது.

இந்த ஆண்டில் சர்க்கார் எப்படியும் 50 புதிய பஸ்களைவிட எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்று தெரியவருகிறது.

பத்திரிகைச் செய்தித் தந்தி கட்டணம் குறைகிறது!

சீனாவிலிருந்து இந்தியாவிற்கு அனுப்பப்படும் பத்திரிகைசெய்தித் தந்திகளுக்கு வார்த்தையொன்றுக்கு ரூ. 0—11—6 ஆக இருந்த கட்டணம் 5 அணாவாகக் குறைக்கப்பட்டிருக்கிறதாம்.

அதேபோல, இங்கிருந்து சீனாவுக்கு அனுப்பப்படும் பத்திரிகைச் செய்தித் தந்திக்கும் அதே குறைவுக் கட்டணமே வசூலிக்கப்படுமாம்.

பண்டித நேரு சீனா செல்கிற சமயத்தில் ஏற்படுகிற இந்தக் கட்டணக் குறைவைக்கூட, இந்திய—சீன நட்புறவு பலப்படுவதற்கான சூசகங்கள் என்று கொள்கின்றனராம்!

நேரு பண்டிதரின் சீன வருகையை வெகுவாக விளம்பரப்படுத்த இந்தியப் பத்திரிகைகள் இதைப் பயன்படுத்திக் கொள்ளும் எனத் தெரிகிறது.

ஏ. வி. பி. ஆசைத்தம்பி இலங்கை பயணம்

இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்தின் அழைப்பின் பேரில், தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி இம்மாதக் கடைசியில் இலங்கை செல்வார் என அறிவிக்கப்படுகிறது.

தி.மு.க. அமைப்புக்கூட்டம்

18—10—54-ல், திருப்பத்தூர் (வ.ஆ.) விடாமங்கலம் கிராமத்தில், ஹராண்மைக் கழகத் தலைவர் தோழர் டி. அண்ணாமலை தலைமையில் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் நடைபெறும்.

பாலில் தண்ணீர்; நெய்யில் கொழுப்பு!

புள்ளி விபரங்கள் புலப்படுத்தும் கலப்பட சம்பவங்கள்

சென்னை, அக். 15—

பால்; நெய் முதலியவற்றில் முக்கால் பாகத்துக்கு மேல் தண்ணீரையும், கொழுப்பையும் கலந்து விற்றதாக, சென்ற மாதத்தில் வழக்கு தொடரப்பட்ட 152 பேர்களிடமிருந்து மொத்தம் ரூ. 3,201 அபராதம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டுள்ளது.

சென்னை நகர சுகாதார அதிகாரி இந்த விபரத்தை வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில், பாதி அளவுக்கு மேற்பட்ட தண்ணீரை பாலில் ஊற்றிக் கலப்படம்செய்ததாக 112பேர் மீது வழக்கு தொடரப்பட்டு, ஆளொன்றுக்கு ரூ. 10 முதல் 50 வரையிலும் அபராதம் விதிக்கப்பட்டனர் என்றும், முக்கால் பாகத்துக்கும் மேற்பட்ட கொழுப்பை நெய்யுடன் கலந்ததாக 12 பேர் மீது வழக்கு தொடரப்பட்டு, ஆளொன்றுக்கு ரூ. 20 முதல் 60 வரை அபராதம் விதிக்கப்பட்டது என்றும், வெண்ணையையும் கலப்படம் செய்து விற்றதாக 17 பேர்மீது வழக்கு தொடுத்து அவர்களுக்கு ரூ. 10 முதல் 60 வரை அபராதம் விதிக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அந்தக் குறிப்புகளில், காப்பிக்கொட்டையுடன், பேரீச்சம்பழக் கொட்டை, கொத்துக் கடலை முதலியவற்றைச் சேர்த்து அரைத்துத் தூளாக்கினர் என்று குற்றம் சாட்டப்பட்டவர்கள் நால்வரும் ரூ. 20 முதல் ரூ. 30 வரை அபராதம் செலுத்தினர் என்றும், நல்லெண்ணெயுடன் கடலை எண்ணெய் கலந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட 6 பேர்களும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் காணப்படுகிறது,

கொள்ளைக் குழு மீது துப்பாக்கிப் பிரயோகம்!

பம்பாயில், பைகுலா என்னும் ரயில்வே நிலையத்தில், ஒரு கூட்ஸ் வண்டியின் பூட்டுகளை உடைத்துக் கொள்ளையடிக்க முயன்ற ஒரு குழு மீது, 'பாரா' கொடுத்துவந்த போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததினால் ஒருவர் காயமுற்றார். காயமுற்றவர் கைது செய்யப்பட்டபின் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.